சேலம் மாவட்டத்தில் 38,300 விவசாயிகள் 36 லட்சம் க.மீ. வண்டல் மண் எடுத்துப்பயன்

விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் சம்பத் தகவல்



சேலம், ஜூலை 29–

சேலம் மாவட்ட நீர்நிலைகளிலிருந்து, 38,300 விவசாயிகள், 36,00,981 கனமீட்டர் மண் எடுத்துப் பயன் பெற்று உள்ளனர் என, கலெக்டர் சம்பத் தெரிவித்தார்.

சேலம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், கலெக்டர் சம்பத் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், கலெக்டர் சம்பத் தெரிவித்ததாவது:–

தமிழக அரசால் விவசாயிகளின் நலனுக்காக, பல்வேறு தொலைநோக்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சேலம் மாவட்ட வேளாண் திட்டப்பணிகளின் முன்னேற்றத்திற்கான விதை மற்றும் உரம் அனைத்தும் தயார்நிலையில் இருப்பு உள்ளது.

மாநிலத்தில் சேலம் முதலிடம்

சேலம் மாவட்டத்தில், பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகள் 133, உள்ளாட்சி துறை கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகள் 846 ஆக மொத்தம் 979 நீர் நிலைகள் உள்ளது. இதுவரை, 415 நீர் நிலைகளில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது. இது வரை 38,300 விவசாயிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, 36,00,981 கனமீட்டர் களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் கிராவல் எடுக்கப்பட்டுள்ளது.

சேலம் வருவாய் கோட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 19 நீர் நிலைகளும், உள்ளாட்சி துறை கட்டுப்பாட்டில் உள்ள 165 நீர் நிலைகளும் என மொத்தம் 184 நீர் நிலைகள் உள்ளது. தற்போது வரை, 57 நீர் நிலைகளில் தூர் வாறும் பணி நடைபெற்று வருகிறது. 6,200 விவசாயிகளும், 2,50,626 கன மீட்ட களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் கிராவல் எடுக்கப்பட்டுள்ளது.

மேட்டூர், ஆத்தூர்

மேட்டூர் வருவாய் கோட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 49 நீர் நிலைகளும், உள்ளாட்சி துறை கட்டுப்பாட்டில் உள்ள 247 நீர் நிலைகளும் என மொத்தம் 296 நீர் நிலைகள் உள்ளது. தற்போது வரை 63 நீர் நிலைகளில் தூர் வாறும் பணி நடைபெற்று வருகிறது. 10,489 பேரும், 8,29,980 கன மீட்டர் களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் கிராவல் எடுக்கப்பட்டுள்ளது.

ஆத்தூர் வருவாய் கோட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 52 நீர் நிலைகளும், உள்ளாட்சி துறை கட்டுப்பாட்டில் உள்ள 237 நீர் நிலைகளும் என மொத்தம் 289 நீர் நிலைகள் மாவட்ட அரசிதழில் விளம்புகை செய்யப்பட்டு தற்போது வரை 96 நீர் நிலைகளில் தூர் வாறும் பணி நடைபெற்று வருகிறது. 11,100 பேரும், 15,07,923 கன மீட்டர் களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் கிராவல் எடுக்கப்பட்டுள்ளது.

வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரியின் அறிக்கையின்படி, சங்ககிரி கோட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 13 நீர் நிலைகளும், உள்ளாட்சி துறை கட்டுப்பாட்டில் உள்ள 197 நீர் நிலைகளும் என மொத்தம் 210 நீர் நிலைகளில், தற்போது வரை 199 நீர் நிலைகளில் தூர் வாறும் பணி நடைபெறுகிறது. 10,511 பேரும், 10,12,452 கன மீட்டர் களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் கிராவல் எடுக்கப்பட்டுள்ளது.

எடப்பாடியில் 2331 பேர் பயன்

எடப்பாடி வட்டத்தில், பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 8 நீர் நிலைகளும், உள்ளாட்சி துறை கட்டுப்பாட்டில் உள்ள 31 நீர் நிலைகளும் என மொத்தம் 39 நீர் நிலைகள் மாவட்ட அரசிதழில் விளம்புகை செய்யப்பட்டு தற்போது வரை 36 நீர் நிலைகளில் தூர் வாறும் பணி நடைபெற்று வருகிறது. 2,331 விவசாயிகளும், 2,63,433 கன மீட்டர் வண்டல், சவுடு விவசாயிகள் பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தங்கத்தாமரை உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் விதைப்பண்ணை மூலம், உற்பத்தி செய்யப்பட்ட விதைகளை, விதை பெறுக்கத்திற்காக, விவசாயிகளுக்கு கலெக்டர் வழங்கினார்.

கூட்டத்தில், வேளாண்மை இணை இயக்குநர் செந்தமிழ்செல்வன், இணைப்பதிவாளர் கூட்டுறவு சங்கங்கள் ராஜேந்திரபிரசாத், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மணிக்குமார், நபார்டு வங்கி மேலாளர் சத்திய பாமா மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உள்ளிட்ட ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

ஊத்தங்கரையில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகள்:கலெக்டர் கதிரவன் நேரில் ஆய்வு

கிருஷ்ணகிரி, ஜூலை 29–

ஊத்தங்கரை ஒன்றியத்தில் ரூ.1 கோடியே 44 லட்சத்து 70 ஆயிரம் மதிப்பில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை, கலெக்டர் கதிரவன் நேரில் ஆய்வு செய்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம, ஊத்தங்கரை ஒன்றியத்தில், ரூ.1 கோடியே 44 லட்சத்து 70 ஆயிரம் மதிப்பில் நடைபெற்று வரும், குடிநீர் திட்ட பணிகள், சாலை அமைக்கும் பணிகள் மற்றும் ஊத்தங்கரை பேரூராட்சியில், புதிதாக கட்டி முடிக்கப்பட்ட எரிவாயு தகன மையம், திடக்கழிவு மேலாண்மை பணிகளை, கலெக்டர் கதிரவன் நேரில் ஆய்வு செய்தார்.

முன்னதாக, ஊத்தங்கரை ஒன்றியம் படப்பள்ளி ஊராட்சியில், ரூ.2.47 லட்சத்தில், வீரப்பன்கொட்டாய் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிறு மின்விசை பம்பு, ஆழ்துளை கிணறு அமைத்து, குடிநீர் விநியோகம் செய்யும் பணிகள், புதுகாடு முதல் மாரப்பன்கொட்டாய் வரை 600 மீட்டர் தூரத்திற்கு ரூ.12 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் சாலைப்பணிகள், பெரியகனகம்பட்டியில் ரூ.7 லட்சம் மதிப்பில் திறந்தவெளி, குடிநீர் கிணறு அமைக்கும் பணிகள், நொச்சிப்பட்டி ஊராட்சி வெள்ளாப்பட்டி தேவர்அடியார் ஏரியில் ரூ.8.25 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் திறந்தவெளி குடிநீர் கிணறு அமைக்கும் பணிகள், நொச்சிப்பட்டியில் ரூ.1 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பில் பசுமை வீடுகள் கட்டுமான பணிகள், ரூ.3.28 லட்சம் மதிப்பில் புதியதாக திறந்த வெளி கிணறு அமைக்கும் பணிகளையும், கலெக்டர் கதிரவன் நேரில் ஆய்வு செய்தார்.

கால்வாய் தூர் வாரும் பணி

ரூ.25 லட்சத்தில் நடைபெறும் கொட்டேரி கால்வாய் தூர் வாரும் பணிகளையும், நேரில் ஆய்வு செய்த கலெக்டர், திறந்து வெளி குடிநீர் கிணற்றை சுற்றி, சுற்று சுவர் கட்டும் பணிகள், தரமானதாக இருக்க வேண்டும் என்று பொறியாளர்கள், ஆணையாளர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, ஊத்தங்கரையில் பொதுமக்கள் பங்களிப்புடன் ரூ.85 லட்சத்தில், புதியதாக கட்டப்பட்டுள்ள, எரிவாயு தகன மையத்தை பார்வையிட்ட கலெக்டர், தகன மேடை அருகே கழிவறை, குடிநீர் பணிகள், சுற்று சுவர் அமைக்க, அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து, ஊத்தங்கரையில் இயற்கை உரம் தயாரிக்கும் பணிகளை பார்வையிட்டு, தற்போது 20 டன் இயற்கை உரம் தயாரிக்கப்பட்டுள்ள நிலையில், உரத்தை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என, பேரூராட்சி அலுவலர்களுக்கு கலெக்டர் கதிரவன் உத்தரவிட்டார்.

ஆய்வின் போது, ஊரக வளர்ச்சித் துறை உதவி செயற்பொறியாளர் சேகர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜசேகர், அசோகன், ஒன்றிய பொறியாளர்கள் பூம்பாவை, ராமசந்திரன், பேரூராட்சி செயல் அலுவலர் பெருமாள், உதவி பொறியாளர் ராஜேந்திரன், ஊத்தங்கரை வித்யா மந்தில் பள்ளி தாளாளர் சந்திரசேகர் ஆகியோர் உடன் இருந்தனர்.

நாமக்கல் மாவட்ட காவல்துறை, அரசு கல்லூரி சார்பில்

சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி, கண்காட்சி துவக்க விழா

நாமக்கல், ஜூலை 29–

நாமக்கல் மாவட்ட காவல்துறை, அரசு கல்லூரி சார்பில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி, கண்காட்சி துவக்க விழா நடைபெற்றது.

நாமக்கல் மாவட்ட காவல்துறை, நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, பொருளியல் துறை சார்பில் நடைபெற்ற தலைக்கவசம், சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி துவக்க விழா நடைபெற்றது. விழாவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அருளரசு, தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் லீலாகுளோரிபாய் முன்னிலை வகித்தார்.

போலீஸ், மாணவர் பங்கேற்பு

பின்னர் போலீஸ் சூப்பிரண்டு, இருசக்கர வாகன பேரணியை துவக்கி வைத்தார். இந்த பேரணி நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில்இருந்துபுறப்பட்டு, நாமக்கல் டவுன், செல்லப்பகவுண்டர் பூங்கா, மலைக்கோட்டை ரோடு, மணிக்கூண்டு வழியாக பூங்கா சாலை வந்து பேரணி நிறைவடைந்தது. இதில் 50 காவலர்கள், 60 மாணவர்கள் மற்றும் பேராசியர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, மாவட்ட காவல்துறை சார்பில், பூங்கா திடலில் அமைக்கபட்டிருந்த தலைக்கவசம் மற்றும் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு கண்காட்சியினை கல்லூரி முதல்வர் துவக்கி வைத்தார். இக்கண்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த தலைக்கவசம் அணிவது மற்றும் சாலைப் பாதுகாப்பு தொடர்பான கண்காட்சி மற்றும் குறும்படத்தினை பொதுமக்கள் ஆர்வமுடன் பார்த்து சென்றனர்.

ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and with in THREE months thereafter. I, J.Subasankar, S/o.P.Jagadeeshwaran, aged 27 years permanently residing at 4/12, Saminathapuram, 1st Street, Anupparpalayam, Tirupur-641652. Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-104. Those who have any valid objections may Notify the same to the Bar Council within 10 days.

J.SUBASANKAR

கனம் வருவாய் கோட்டாட்சியர் (ம) உட்கோட்ட நீதிபதி தருமபுரி
C.P.No. 214/2017(அ6)

T.சக்திவேல், த/பெ.தீர்த்தான்,
ஜம்மன அள்ளி கிராமம்,
தென்கரைகோட்டை உள்வட்டம்,
பாப்பிரெட்டிப்பட்டி வட்டம்,
தருமபுரி மாவட்டம்.
…மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் சக்திவேல், த/பெ.தீர்த்தான் என்பவரது மகன் மணிகண்டன் மேற்படி விலாசத்தில் கடந்த 25.04.2004ம் தேதியன்று பிறந்தார். இந்த பிறப்பு குறித்து பதிவு செய்ய தவறிவிட்டதால் பிறப்பை பதிவு செய்யக்கோரி தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுதாரரின் மகன் மணிகண்டன் என்பவருக்கு பிறப்பு சான்று வழங்க எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் தருமபுரி வருவாய் கோட்டாட்சியரிடம் 15 நாட்களுக்குள் ஆட்சேபனை தெரிவித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அவ்வாறு 15 நாட்களுக்குள் ஆட்சேபனை செய்ய தவறினால் மனு மேற்படி மணிகண்டன் என்பவருக்கு பிறப்பு சான்று வழங்கப்படும் என்பதை இதன் மூலம் கண்டிப்பாய் அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
உத்திரவுப்படி

கனம் வருவாய் கோட்டாட்சியர் (ம) உட்கோட்ட நீதிபதி அரூர்
C.P.No. 19/2017(அ6)

தமிழரசன், த/பெ.கணபதி,
கணபதிநகர் கிராமம்,
கேத்துரெட்டிப்பட்டி அஞ்சல்,
பாப்பிரெட்டிப்பட்டி வட்டம்,
தருமபுரி மாவட்டம்.
…மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தமிழரசன், த/பெ.கணபதி என்பவரது அப்பா கணபதி மேற்படி விலாசத்தில் கடந்த 20.05.1992ம் தேதியன்று இறந்தார் என்றும் இறப்பு குறித்து பதிவு செய்ய தவறிவிட்டதால் இறப்பை பதிவு செய்யக்கோரி அரூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுதாரரின் அப்பா கணபதி என்பவருக்கு இறப்பு சான்று வழங்க ஆட்சேபனை இருந்தால் அரூர் வருவாய் கோட்டாட்சியரிடம் 15 நாட்களுக்குள் ஆட்சேபனை தெரிவித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்படி கணபதி, த/பெ. பெரியண்ணகவுண்டர் என்பவருக்கு இறப்பு சான்று வழங்கப்படும் என்பதை இதன் மூலம் கண்டிப்பாய் அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
உத்திரவுப்படி

கனம் வருவாய் கோட்டாட்சியர் (ம) உட்கோட்ட நீதிபதி அரூர்
C.P.No. 63/2017(அ6)

C.மாரிமுத்து, த/பெ.சின்னராஜ்,
நல்லகுட்டன அள்ளி,
அஸ்தாரிகிரியூர்,
பாப்பிரெட்டிப்பட்டி வட்டம்,
தருமபுரி மாவட்டம்.
…மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் மாரிமுத்து, த/பெ. சின்னராஜ் என்பவரது தாத்தா குள்ளப்பன், த/பெ.ஸ்ரீதரன் மேற்படி விலாசத்தில் கடந்த 31.10.2007ம் தேதியன்று இறந்தார் என்றும் இறப்பு குறித்து பதிவு செய்ய தவறிவிட்டதால் இறப்பை பதிவு செய்யக்கோரி அரூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுதாரரின் தாத்தா குள்ளப்பன், த/பெ.ஸ்ரீதரன் என்பவருக்கு இறப்பு சான்று வழங்க ஆட்சேபனை இருந்தால் அரூர் வருவாய் கோட்டாட்சியரிடம் 15 நாட்களுக்குள் ஆட்சேபனை தெரிவித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்படி குள்ளப்பன், த/பெ. ஸ்ரீதரன் என்பவருக்கு இறப்பு சான்று வழங்கப்படும் என்பதை இதன் மூலம் கண்டிப்பாய் அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
உத்திரவுப்படி

ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and with in THREE months thereafter. I, A.Panneer Selvam, S/o.V.Arumugam aged 24 years permanently residing at No.9/17, Masthan Layout, Palani Andavar Nagar, Udumalpet-Tk, Tirupur-(Dt)-642126. Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-104. Those who have any valid objections may Notify the same to the Bar Council within 10 days.

A.PANNEER SELVAM

மேதகு சிறப்பு சார்பு நீதிமன்றத்தில் மோட்டார் வாகன விபத்து வழக்குகள் கோயமுத்தூர்
M.C.O.P.No. 228/2017

V.அன்னபூரணி
…மனுதாரர்

–எதிர்–

S. முத்துராஜ், த/பெ.சபரிமலை,
பரணி சைசிங்,
கொசவம்பாளையம், பல்லடம்
தாலூக்கா, கோயமுத்தூர்.
…எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனக்கு கடந்த 3.11.2013 தேதியன்று சாலை விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக இழப்பீடு கோரி தங்களுக்கு எதிராகவும் மற்றோருவருக்கு எதிராகவும் மேற்படி M.C.O.P.No.228/2017 வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு மேற்படி நீதிமன்றத்தில் விசாரணைக்காக வருகிற 23.8.2017 தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. ஆகவே வருகின்ற 23.8.2017 தேதியன்று மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சம் ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும்.

A.தேவராஜ், M.A.,B.L.,
மனுதாரர், கோயமுத்தூர்.

மாவட்ட முன்சீப் நீதிமன்றம், சூலூர்
O.S.No.899/2017

1. சுப்ரமணியம் மற்றும் 12 நபர்கள்
…வாதிகள்

–எதிர்–

1.கணேசன், 2. முருகேசன்,
3. வட்டாட்சியர், சூலூர் தாலூக்கா,
4. மாவட்ட ஆட்சித்தலைவர்,
கோயமுத்தூர்.
…பிரதிவாதிகள்

அறிவிப்பு

மேற்படி 1 முதல் 9 வரை உள்ள வாதிகளின் தாத்தாவும் 10 முதல் 13 வரை வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகளின் கொள்ளு தாத்தாவுமான பழனிகவுண்டர் த/பெ.லேட். குட்டி கவுண்டர் கடந்த 11.11.1977ம் தேதியன்று 46/41A, வார்டு எண்.1 காங்கேயம் பாளையம், சூலூரில் காலமானதை முன்னிட்டு மேற்படி காலமான பழனிக்கவுண்டர் அவர்களுக்கு வாதிகள் மட்டுமே வாரிசுதாரர்கள் என விளம்புகை பரிகாரம் கோரி மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த தாவா எதிர்வரும் 23.08.2017ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. ஆட்சேபனை உள்ளவர்கள் மேற்படி வாய்தா தேதியில் மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் மேற்படி தாவா ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

த.வடிவேல், B.Sc.,LLB.,
Advocate, Coimbatore

கோயமுத்தூர் மாவட்ட இரண்டாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம்
I.A.No. 1670/2014
அ.வ.எண்.1529/2014

முஜீபூர் ரஹ்மான்
…வாதி/மனுதாரர்

–எதிர்–

மனோகரம்
…பிரதிவாதி எண்.2/
எதிர்மனுதாரர் எண்.2

அறிவிப்பு

மேற்படி எனது கட்சிகாரர் (வாதி), பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கு கோயமுத்தூர் மாவட்ட இரண்டாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.1529/2014 இ.ம.எண்.1670/2014, வருகிற 23.08.2017ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. 23.08.2017ம் தேதி 2ம் பிரதிவாதி காலை 10.00 மணிக்கு இரண்டாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபணை ஏதும் இருப்பின் தெரிவிக்காலம் என்பதனை இதன் மூலம் அறியவும்.

கே. வெள்ளியங்கிரி, B.A.,B.L.,
Advocate, Coimbatore.

மேதகு முதன்மை குடும்ப நீதிமன்றம் கோயமுத்தூர்
H.M.O.P.No. 1371/2016

S.நீலவேணி
…மனுதாரர்

–எதிர்–

I.சீனிவாசன், த/பெ.இருளப்பன்,
க.எண்.120 (பழைய க.எண்.124),
பெருமாள் கோவில் ரோடு,
ராமநாதபுரம், கோயமுத்தூர்–641045.
…எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தங்களுக்கு எதிராக விவாகரத்து கேட்டு மேற்படி முதன்மை குடும்ப நல நீதிமன்றத்தில் தங்களுக்கும் மனுதாரருக்கும் கடந்த 18.11.2001 தேதியில் கோவை, ராமநாதபுரம், திருச்சி சாலை, ஸ்ரீ ஆண்டாள் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற திருமணத்தை முறிவு செய்து விவாகரத்து பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு மேற்படி நீதிமன்றத்தில் வருகின்ற 23.08.2017 தேதியன்று விசாரணைக்காக தங்களது வருகைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. ஆகவே வருகின்ற 23.08.2017 தேதியன்று மேற்படி முதன்மை குடும்ப நீதிமன்றம் கோயமுத்தூரில் காலை 10.30 மணிக்கு ஆஜராகி ஆட்சேபணை இருப்பின் தெரிவித்து கொள்ள வேண்டியத. தவறும் பட்சம் வழக்கு ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும்.

A.தேவராஜ், M.A.,B.L.,
மனுதாரர், கோயமுத்தூர்.

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் வடக்கு கோயமுத்தூர்
ந.க.எண். 1150/2017

K.ஆறுமுகம்,
கதவு எண். பழையது 68,
புதியது 141, கடை வீதி,
காளப்பட்டி, கோயமுத்தூர்.
…மனுதாரர்

–எதிர்–

வருவாய் கோட்டாட்சியர்
அவர்கள், வடக்கு கோயமுத்தூர்.
…எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் மகன் A.ஹரிகிருஷ்ணன் என்பவர் கடந்த 5.4.1996 தேதியன்று கதவு எண்.4/131, செங்காடு தோட்டம், வெள்ளமடை, கோயமுத்தூர் என்ற முகவரியில் பிறந்ததற்காக பிறப்பு சான்றிதழ் வேண்டி விண்ணப்பித்துள்ளார். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் அவ்வறிப்பு கண்ட 7 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு தெரிவிக்குமாறும் தவறும் பட்சத்தில் மனுதாரர் கோரியபரிகாரம் உத்தரவாகும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்,
(வடக்கு), கோவை.

மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்
O.S.No.155/2017

1. சுமதி, க/பெ.லேட்.வாசகன்
2. இளவர். அருண்குமார்
(அவருக்காக அவரது அம்மா
சுமதி) க.ப.எண்.160,
பு.எண்.163, பெருமாள்
கோவில்வீதி, கருமத்தம்பட்டி,
திருப்பூர் மாவட்டம்.
…வாதிகள்

–எதிர்–

1.தேவி, க/பெ.லேட். வாசகன்
2.ராசாத்தி, க/பெ.லேட்.
ரங்கசாமி, 1/329, கரட்டான்காடு
பொன்னாபுரம், முதலிபாளையம்
கிராமம், திருப்பூர் மாவட்டம்.
3. உயர்திரு. மாவட்ட ஆட்சியர்
அவர்கள், திருப்பூர்.
4. உயர்திரு. வட்டாட்சியர்
அவர்கள், திருப்பூர் (தெற்கு).
…பிரதிவாதிகள்

அறிவிப்பு

மேற்படி வாதிகள் கடந்த 8.11.2016 தேதி 1/329, கரட்டான்காடு பொன்னாபுரம் முதலிபாளையம் கிராமம், திருப்பூர் முகவரியில் இறந்த வாசகன் அவர்களின் வாரிசுகள் வாதிகள் மட்டுமே என அறிவிக்க கோரி மேற்படி வழக்கா தாக்கல் செய்துள்ளனர். மேற்படி வழக்கானது வருகின்ற 3.8.2017ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனையிருந்தால் மேற்படி தேதியில் மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு ஆஜராகி தெரிவித்துக் கொள்ளவும். தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கானது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

C.கதிர்வேல், B.A.,B.L.,
B.உதயமூர்த்தி, B.A.,B.L.,
வழக்கறிஞர்கள், திருப்பூர்.

நகை ஏல அறிவிப்பு

திருப்பூர் மாவட்டம், திருப்பூர்-7, TNK புரம் வடக்கு, M.S.நகர் ஆட்டோ ஸ்டேண்ட் அருகில், கொங்கு மெயின்ரோடு, No.48A, ஸ்ரீ சிட்டம்மான பைனான்ஸ் நகை அடகு கடையில் 01.11.2015 முதல் 30.04.2016 வரை அடகு வைக்கப்பட்டு காலம் கடந்தும் திருப்பபடாமல் உள்ள தங்கம் மற்றும் வெள்ளி நகைகளை 08.8.2017 செவ்வாய்கிழமை காலை 10 மணி முதல் வட்டாட்சியர் அல்லது அவரால் நியமனம் செய்யப்படும் அலுவலர் முன்னிலையில் மாவட்ட ஏலதாரர் வி.செந்தாமரைகண்ணன் அவர்களால் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

உயர்திரு. சார்பு நீதிமன்றம் அவர்கள் சமூகம், உடுமலைப்பேட்டை
I.A.No. 133/2017
O.S.No. 223/2012

உடுமலைப்பேட்டை வட்டம்,
ராமச்சந்திராபுரம் அஞ்சல்,
V.வல்லக்குண்டாபுரம் தெற்கு வீதியில்
வசிக்கும் ராமசாமி நாயுடு மகன்
தேவராஜ்.
…மனுவாதி/வாதி

–எதிர்–

உடுமலைப்பேட்டை வட்டம்,
நெகமம் வழி, வருகல்பட்டி அஞ்சல்,
V.வல்லக்குண்டாபுரம் கிராமத்தில்
வசிக்கும் (லேட்) வேங்கடசாமி மகன்
செந்தில்குமார்.
…எதிர்மனுவாதி/3ம்எதிர்மனுவாதி

நோட்டீஸ்

மேற்படி வழக்கில் மனுவாதி/வாதி தாக்கல் செய்த காலதாமத மனு I.A.No.133/2017 என்ற எண்ணில் மேற்படி எதிர்மனுவாதி ஆஜராக வரும் 21.08.2017ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி நம்பரில் உமக்கு ஏதேனும் ஆட்சேபணையிருப்பின் மேற்படி வாய்தா தேதியன்று காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்குரைஞர் மூலமாகவோ சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. அல்லாதபட்சம் மனு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இந்த நோட்டீஸ் மூலம் அறியவும்.

A.சிவக்குமார், B.Com.,B.L.,
வழக்கறிஞர், உடுமலைப்பேட்டை.

கோயமுத்தூர் முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம்
I.A.No. 335/2017
I.A.No. 627/2015
I.A.No. 1103/2013
O.S.No.51/2005

K.M.சோமசுந்தரம் (லேட்)
மற்றும் 6 நபர்கள்
…மனுதாரர்கள்/1 மற்றும் 3
வாதிகளின் வாரிசுகள்

–எதிர்–

K.M.கிருஷ்ணசாமி (லேட்),
மற்றும் 15 நபர்கள்
…எதிர்மனுதாரர்கள்/
பிரதிவாதிகள்

13 முதல் 16
எதிர்மனுவாதிகளுக்கு அறிவிப்பு

13) D.ஜெயராமகிருஷ்ணன்,
த/பெ.லேட்.தேவராஜ்,
ஸ்ரீஅங்காளபரமேஸ்வரி இல்லம்,
கதவு எண்.18, நேரு வீதி,
ஜே.ஜே.நகர்,
இடையர்பாளையம்,
கோயமுத்தூர்–641025.
14. D.வசந்தா (லேட்),
த/பெ.லேட். தேவராஜ்,
க/பெ.D.K.ராமமோகன், கதவு
எண்.35, ராமலிங்கம் கிராஸ்
ரோடு, எண். 3 கே.கே.புதூர்,
சாய்பாபா காலனி, கோயமுத்தூர்.
15. D.ஜெயந்தி, த/பெ.லேட்.
தேவராஜ், கதவு எண்.9,
அனுக்கிரகா, 1வது அவன்யூ,
2வது விங், புதிய தில்லை நகர்,
பி.என்.புதூர் அஞ்சல்,
கோயமுத்தூர்–641 041.

16. திருமதி. அபீபா,
க/பெ.லேட். அப்துல் ரஹீம்,
டெய்லர் கடை, கதவு எண்.412,
சித்திவிநாயகர் கோவில் வீதி,
கோயமுத்தூர்– 641001.

மேற்படி மனுவாதிகள் மேற்படி மூன்று இடைநிலை விண்ணப்பங்களை மேற்படி வழக்கில் தாக்கல் செய்து அதில் மேற்படி 13 முதல் 16 வரை எதிர்மனுவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்புமாறு உத்தரவாகி மேற்படி வழக்கு 11.08.2017 தேதியில் மேற்படி 13 முதல் 16 வரை எதிர்மனுவாதிகளை ஆஜராக வாய்தா போடப்பட்டுள்ளது. ஆகவே தாங்கள் மேற்டி வாய்தா தேதியன்று மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழ்கறுரைஞர் மூலமாகவோ ஆஜராகி தங்கள் ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி மூன்று இடைநிலை விண்ணப்பங்கள் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதனை அறியவும்.

என். பார்த்தசாரதி, B.A.,B.L.,
ஏ.ரவிசங்கர், B.Sc.,B.L.,
வழக்கறிஞர்கள், கோயமுத்தூர்.

---

equitas

எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 410'A', 4வதுமாடி, ஸ்பென்ஸர் ப்ளாசா, ஃபேஸ் II, எண். 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை 2
CIN: U65100TN2007PLC064069 | Ph: 044 4299 5000 | www.equitas.in

ஜூன் 30, 2017 வரை முடிவடைந்த மூன்று மாதத்திற்கான தணிக்கை செய்யப்படாத தனிப்பட்ட மற்றும் ஒட்டு மொத்த நிதிநிலை முடிவுகள்

(₹ லட்சத்தில்)

வ. எண்	விபரங்கள்	தனிப்பட்ட முடிவுகள்			ஒட்டு மொத்த முடிவுகள்		
		முடிவடைந்த மூன்று மாதங்கள் ஜூன் 30, 2017 தணிக்கை செய்யப்படாதது	முடிவடைந்த ஆண்டு மார்ச் 31, 2017 தணிக்கை செய்யப்பட்டது	முடிவடைந்த மூன்று மாதங்கள் ஜூன் 30, 2016 தணிக்கை செய்யப்படாதது	முடிவடைந்த மூன்று மாதங்கள் ஜூன் 30, 2017 தணிக்கை செய்யப்படாதது	முடிவடைந்த ஆண்டு மார்ச் 31, 2017 தணிக்கை செய்யப்பட்டது	முடிவடைந்த மூன்று மாதங்கள் ஜூன் 30, 2016 தணிக்கை செய்யப்படாதது
1	செயலாக்கங்களிலிருந்து மொத்த வருமானம்	330.81	1,229.59	223.80	45,324.39	155,221.16	34,811.62
2	இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரி, மற்றும் வழக்கத்திற்கு மாறான / அசாதாரண வகைகளுக்கு முன்	177.74	750.30	62.79	2,535.73	26,263.41	9,634.06
3	இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரிக்கு முன் மற்றும் வழக்கத்திற்கு மாறான / அசாதாரண வகைகளுக்குப் பின்	177.74	750.30	62.79	2,535.73	25,156.09	9,634.06
4	இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரி, வழக்கத்திற்கு மாறான / அசாதாரண வகைகளுக்குப் பின்	109.84	468.17	28.02	1,559.92	15,936.57	6,117.27
5	சமபங்கு மூலதனம்	33,824.38	33,781.37	33,574.13	33,824.38	33,781.37	33,574.13
6	காப்புநிதிகள் மறுமதிப்பீட்டு காப்புநிதிகள் தவிர்த்து (முந்தைய ஆண்டின் இருப்பு நிலை அறிக்கையில் காண்பித்துள்ளபடி)		133,726.36	–	–	189,279.00	–
7	தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயலாக்கங்கள் ஈட்டிய பங்கு ஒன்றுக்கான வருவாய் – மூன்று மாதங்கள் முடிவில்						
(i)	அடிப்படை (₹)	0.03	0.14	0.01	0.46	4.79	1.91
(ii)	குறைமதிப்பு (₹)	0.03	0.14	0.01	0.45	4.69	1.86

குறிப்பு: மேற்குறிப்படப்பட்டவைகள் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015-ன், விதி 33-ன் படி பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத முழுவடிவிலான நிதிநிலை முடிவுகளின் சுருக்கப்பட்ட வடிவம் ஆகும். மூன்று மாதங்களுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் நிறுவனத்தின் **www.equitas.in** என்ற இணையதளத்திலும், பங்குவர்த்தக நிறுவனத்தின் **www.nseindia.com, www.bseindia.com** என்ற இணையதளங்களிலும் காணலாம்.

இயக்குனர்கள் குழு சார்பாக
sd. S பாஸ்கர்
செயல் இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி

இடம் : சென்னை
தேதி : ஜூலை 28, 2017